பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
30 11 2025 12 40
ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழ் மொழி மிகவும் உயர்வானது, தமிழ் இந்தியாவின் பெருமிதம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. Ditwah புயல் தற்போது மணிக்கு 12 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

3. புயல் பாதிப்புகளை எதிர்கொள்ள தேசிய பேரிடர் மீட்புப் படையின் மேலும் 10 பிரிவுகள் வந்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரை சுமுகமாக நடத்த ஒத்துழைக்குமாறு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

5. ரஷ்யா உடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் யுக்ரைன் தூதுக் குழுவிற்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழ் மொழி மிகவும் உயர்வானது, தமிழ் இந்தியாவின் பெருமிதம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், உலகின் மிகப் பழமையான மொழி மற்றும் தொண்மையான நகரத்தை இணைக்கும் காசி தமிழ்ச் சங்கமத்தின் 4ஆம் ஆண்டு நிகழ்ச்சிகள் நாளை மறுநாள் தொடங்க இருப்பதை சுட்டிக்காட்டினார்.

அண்மையில் கோவையில் நடைபெற்ற இயற்கை வேளாண் மாநாட்டில் பங்கேற்றதை நினைவுகூர்ந்த பிரதமர், மண் வளத்தைப் பாதுகாக்க இயற்கை விவசாயத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கடற்படையின் புதிய போர்க் கப்பலுக்கு INS Mahe பெயர் சூட்டப்பட்டிருப்பது புதுச்சேரி மற்றும் மலபார் மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின்போது தமிழகத்தின் தஞ்சாவூரில் தயாரிக்கப்பட்ட நடராஜர் சிலை உள்ளிட்ட இந்திய தயாரிப்புகளை பரிசளித்ததன் வாயிலாக உள்நாட்டு கைவினைஞர்களுக்கு உலகளாவிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் உள்ளிட்ட சர்வதேச போட்டிகளில் இந்திய அணியினரின் வெற்றி, நாட்டு மக்களுக்கு ஊக்கமளிப்பதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

Ditwah புயல் தற்போது மணிக்கு 12 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் புயல் காரைக்காலில் இருந்து 90 கிலோ மீட்டர் தொலைவிலும், தமிழகத்தின் நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் இருந்து 120 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கு-தென்கிழக்கே 220 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இன்று மாலை தமிழகம், புதுச்சேரி கடற்பகுதியில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவை நெருங்கக்கூடும் என்றும், அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழகம், புதுச்சேரி கடற்பகுதிக்கு இணையாக வடக்கு நோக்கி நகரக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சென்னையில் உள்ள அவசர கால கட்டுப்பாட்டு மையத்தில் புயல் நிலவரம் குறித்து ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. KKSSR ராமச்சந்திரன், மாநிலத்தில் மழை காரணமாக 3 பேர் உயிரிழந்ததாக கூறினார்.

56 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலான விளை நிலங்கள் தண்ணீரில் மூழ்கியிருப்பதாகவும், மழை தணிந்த பிறகு உரிய ஆய்வுக்குப் பிறகு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புயல் பாதிப்பை எதிர்கொள்ள பேரிடர் மேலாண்மை படையினர் தயார் நிலையில் இருப்பதாகவும் திரு. KKSSR ராமச்சந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரை சுமுகமாக நடத்த அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

புதுதில்லியில் இன்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு. ஜெ.பி. நட்டா, திரு. கிரண் ரிஜிஜு, திரு. அர்ஜுன் ராம் மெக்வால், டாக்டர் எல். முருகன் மற்றும் பிஜேபி, காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் நாடாளுமன்ற குழு தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தொடர் நாளை தொடங்கி வரும் 19ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

ரஷ்யா உடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான யுக்ரைன் தூதுக் குழுவின் புதிய தலைவராக அந்நாட்டின் பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. Rustem Umerove நியமிக்கப்பட்டுள்ளதாக அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இப்பொறுப்பில் இருந்த Andriy Yermak ஊழல் புகாரில் சிக்கியதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>